**<u>சார்பு நீதிமன்றம், இலால்குடி.</u>**

நாள்: 07.12.2021 செவ்வாய் கிழமை

OS.No.266/2018 C/W OS.No. 37/2020 PW2: மகேந்திரன்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி பாலசுப்பிரமணியன் என்பவருக்காக தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 02.07.2000 ம் தேதியில் எழுதிக்கொள்ளப்பட்ட ஆவணத்தில் என்ன சரத்துக்கள் எழுதப்பட்டது என்ற முழுவிவரம் எனக்கு தெரியும். மேற்படி ஆவணமானது சங்கிலிமுத்து பெற்றுக்கொண்ட ரூபாய். 2 லட்சத்திற்காக எழுதப்பட்ட ஒத்தி ஆவணம் என்று சொன்னால் சரிதான். வாதி பாலசுப்பிரமணியனுக்கு ஆதரவாக நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.